தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்,
சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.D1/17528/2016, நாள். 03.03.2018

தாட்கோ நிறுவனத்தின் பயன்பாட்டில் இருந்த கழிவு செய்யப்பட்ட இன்டிகோ மற்றும் அம்பாசிடர் கார் Sealed Cover & Auction விற்பனை செய்யப்பட உள்ளது. அதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. வாகனங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் உள்ளது உள்ளபடியே எனும் நிலையில் விற்பனைக்கு தயாராக உள்ளது.

| வ. எண். | வாகனத்தின் விபரம் | வாகனம் பார்வைக்காக வைக்கப்பட்ட அலுவலகத்தின் விலாசம். |
|---|---|---|
| 1 | TN-02-AF-1972 – Indigo 2008 மாடல் | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், எண்.31, 2–வது சந்து, செனடாப் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை – 18 |
| 2 | TN-02-U-2226 – Ambassador 2005 மாடல் | |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்காக விண்ணப்பபிக்கும் விண்ணப்பதாரர்கள் வரிசை எண்.1–ல் குறிப்பிட்டுள்ள வாகனத்திற்கு ரூ.10,000/–மும், வரிசை எண்.2–ல் கண்ட வாகனத்திற்கு ரூ.5,000/–மும் என ஈட்டுறுதி வைப்புத் தொகையுடன் (வட்டிதரப்படமாட்டாது) கேட்புவரைவோலை /வங்கி வரைவு–ஐ மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை என்ற பெயரில் எடுத்து மேற்கண்ட அலுவலகத்திற்கு 15.03.2018 மாலை 4.00 மணிக்கு முன்பாக வந்து சேர வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளியின் உறையின் மேல் பயன்படுத்தப்பட்ட ஊர்தி வாங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்விதம் குறிப்பிடப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கப்படமாட்டாது.

ஆஜராகியுள்ள ஒப்பந்தக்காரரின் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி மாலை 5.00 மணியளவில் 15.03.2018 அன்று திறக்கப்படும்

ஈட்டுறுதி வைப்புத் தொகைக்கான வங்கி வரைவின்றி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உடனே நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த காலக் கெடுவிலிருந்து 30 தினங்களுக்குள் ஒப்பந்தப்புள்ளியின் ஏற்பு செலுத்தப்பட வேண்டிய மீதி 90 சதவீதத் தொகை மற்றும் வாகன ஒப்படைப்பு காலம் பற்றிய விவரங்கள் வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

எவ்வித காரணமும் காட்டாமல் ஒப்பந்தப்புள்ளி ஏலத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ, கழகத்திற்கு முழு உரிமை உண்டு.

வெற்றி பெற்ற ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொண்ட கால கெடுவிலிருந்து வரையறுக்கப்பட்ட நாட்களுக்குள் 90 சதவீதம் தொகையை ஊர்தி விற்கும் தினத்தன்று தமிழ்நாடு அரசால் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை வரிக்கான செலுத்துச்சீட்டுடன் செலுத்தத் தவறினாலும், வாகனத்தை மேற்குறிப்பிட்ட விலாசத்தினின்று எடுத்துச் செல்லும் ஆணையை உடனே பெற்று செல்லத் தவறினாலும் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றதற்கான ஆணை ரத்து செய்யப்படும். அவ்வாறு ரத்து செய்தால், தாட்கோவிற்கு ஏற்பட்ட கடன்களுக்கும், இழப்பிற்கும் மேற்குறித்த விதிமுறைகளை மீறிய ஒப்பந்தக்காரர்கள் ஏற்க வேண்டியிருக்கும்.

ஒம்/– சஜ்ஜன்சிங் ரா சவான்,
மேலாண்மை இயக்குநர்

பெறுநர்: பட்டியலில் உள்ளபடி

நகல். பொது மேலாளர் (நிர்வாகம்),
தாட்கோ, தலைமை அலுவலகம்,
சென்னை – 18. (குழு உறுப்பினர் பார்வைக்கு)

நகல். நிதி ஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர்,
தாட்கோ, தலைமை அலுவலகம்,
சென்னை – 18. (குழு உறுப்பினர் பார்வைக்கு).

நகல். பொது மேலாளர் (தொழில் நுட்பம்),
தாட்கோ, தலைமை அலுவலகம்,
சென்னை – 18. (குழு உறுப்பினர் பார்வைக்கு)

நகல். பொது மேலாளர் (திட்டம்),
தாட்கோ, தலைமை அலுவலகம்,
சென்னை – 18. (குழு உறுப்பினர் பார்வைக்கு).

நகல். விளம்பர பலகை / இணையதளம்.

//உண்மை நகல் உத்தரவின்படி//

5/3/18
மேலாண்மை இயக்குநருக்காக

05.03.2018